நகராட்சி நிர்வாகம்,
திருச்செந்தூர் –628215
நாள்: 06.05.2022

<u>சாதாரணக்கூட்டம்</u>

அன்புடையீர் வணக்கம்,

திருச்செந்தூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் 16.05.2022 தேதி வெள்ளி கிழமை, **காலை** 10.30 மணிக்கு நகர் மன்ற கூட்ட அரங்கில் வைத்து தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

தலைவர்
திருச்செந்தூர் நகராட்சி

<u>பொருள் எண். 1</u>

திருச்செந்தூர் நகராட்சி மன்றத் தலைவர் மற்றும் 24 வது வார்டு உறுப்பினர் திருமதி. ர. சிவஆனந்தி அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. கணேசபுரத்தில் சாலை வசதி இல்லாத இடங்களில் சாலை அமைக்க கேட்டல்.
2. மின் விளக்கு வசதி இல்லாத இடங்களில் மின் விளக்கு அமைத்து தர வேண்டியும், புதியதாக மின் கம்பங்கள் அமைக்க கேட்டல்.
3. குடிநீர் தேக்க தொட்டி புதியதாக கட்டி, குரங்கணி ஆற்று குடிநீர் வழங்க கேட்டல்.
4. புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டித் தர கேட்டல்.
5. கணேசபுரத்தில் உள்ள அருள்மிகு சந்தனமாரியம்மன் கோவிலுக்கு குடிநீர் இணைப்பு மற்றும் கோயில் சுற்றுப்புறம் முழுவதும் பார்க்கிங் கல் அமைத்து குப்பைகளை அகற்ற கேட்டல்.
6. கணேசபுர ஊர் பொதுக் கிணற்றை சுத்தம் செய்து மின்விசைப் பம்பு அமைத்துத் தர கேட்டல்.
7. கணேசபுர ஊர் பொது கழிப்பிடத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வர ஏற்பாடு செய்து தர கேட்டல்..

தீர்மானம் எண். 53:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 2

திருச்செந்தூர் நகராட்சி 8 வது வார்டு உறுப்பினர் திருமதி. கிருஷ்ணவேணி அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. 8வது வார்டு மார்க்கெட் செல்லும் சாலையில் உள்ள குடிநீர் நீர்தேக்க தொட்டி அருகிலுள்ள முட்புதர்கள் அப்புறப்படுத்த கேட்டல்.
2. கல்யாணசுந்தர விநாயகர் கோவில் தெருவில் பூக்கடை அருகில் இருக்கும் குடிநீர் அடிபம்பு சரி செய்து அதனருகில் குடிநீர் டேங்க் அமைக்க கேட்டல்.
3. தெருவிளக்குகள் அனைத்தும் புதிய LED லைட்டாக மாற்றி அமைக்க கேட்டல்.

தீர்மாணம் எண். 54:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 3

திருச்செந்தூர் நகராட்சி 10 வது வார்டு உறுப்பினர் திருமதி. செ. அர்ச்சனா அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. 10வது வார்டு பகுதிக்கு உட்பட்ட பகுதிகளான சங்கிவிளை, பாரதியார் தெரு 1,2,3,4 வது தெருக்களில் பெயர் பலகை அமைக்க கேட்டல்.
2. சங்கிவிளை பகுதியில் பழுதடைந்து இடிந்த நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தை புதியதாக கட்டி தரக் கேட்டல்.
3. பாரதியார் தெருவில் அமைந்து இருக்கும் வாறுகால்களை சீரமைத்து கான்கிரீட் மூடி அமைக்க கேட்டல்.

தீர்மாணம் எண். 55:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 4

திருச்செந்தூர் நகராட்சி 19 வது வார்டு உறுப்பினர் திரு. S. மகேந்திரன் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. 19வது வார்டு முத்துமாலை அம்மன் கோவில் தெருவில் 2 தெருக்களில் குடிநீர் இணைப்பு குழாய் மற்றும் தெருவிளக்கிற்கும் மெயின் லைன் அமைக்க கேட்டல்.

தீர்மாணம் எண். 56:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 5

திருச்செந்தூர் நகராட்சி 15வது நிதிக்குழு மானிய திட்டம் 2020–21 ன் கீழ்கண்ட பணிகள் செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ளது.

வ.எண்.	பணி விபரம்	மதிப்பீடு (லட்சத்தில்)
1	புதியதாக 20 எண்ணம் பேட்டரி வாகனம் வாங்குதல்.	50.00
2.	அமலிநகர் முதல் முத்துமாலையம்மன் கோவில் தெரு வரை புதியதாக குடிநீர் மெயின் குழாய் அமைத்தல்.	5.00
3.	ஜீவாநகர் முதல் கல்யாணசுந்தர விநாயகர் கோவில் தெரு மேல்நிலை நீர்தேக்க தொட்டி வரை புதியதாக குடிநீர் மெயின் குழாய் அமைத்தல்.	3.00
4.	அரசு மருத்துவமனை பின்புறம் முதல் எடிசன் மருத்துவமனை எதிர்புறம் வரை புதியதாக குடிநீர் மெயின் குழாய் அமைத்தல்.	6.50
	மொத்தம்	64.50

மேற்படி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளவுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

தீர்மானம் எண். 57:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 6

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள அறிவிக்கப்பட்டுள்ளது.

வ.எண்.	பணி விபரம்	உத்தேச மதிப்பீடு (லட்சத்தில்)
1	புதியதாக நகராட்சி அலுவலக கட்டிடம் கட்டுதல்.	500.00
2.	புதியதாக பேருந்துநிலையம் அமைத்தல்.	1500.00
3.	புதியதாக தினசரி சந்தை கட்டிடம் கட்டுதல்.	500.00
4.	புதியதாக நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைத்தல்.	200.00
5.	திருச்செந்தூர் பேருந்துநிலையம் அருகில் மாட்டுத்தாவணியில் புதியதாக கழிப்பிடம் கட்டுதல்.	36.28
6.	நகராட்சியில் புதியதாக நகர்புற காடுகள் அமைத்தல்.	6.00
	மொத்தம்	2742.28

மேற்படி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளவுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

தீர்மானம் எண். 58:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 7

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் புதிய பேருந்துநிலையம் மற்றும் புதிய தினசரி சந்தை பணிகள் மேற்கொள்ள அறிவிக்கப்பட்டுள்ளது, மேற்படி பணிகள் மேற்கொள்ள தனியார் திட்ட ஆலோசகர் மூலம் விரிவான திட்ட பிரேரணை தயார் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தனியார் திட்ட ஆலோசகர் மூலம் பணிகள் மேற்கொண்டு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

வ.எண்.	பணி விபரம்	Glency Docmra Consultants India Pvt. Ltd	Maxcon Town planning & Development	Eclat Designs & Infrastructure Pvt. Ltd.
1	புதியதாக தினசரி சந்தை கட்டிடம் கட்டுதல்.	6,25,000	7,75,000	7,50,000
2.	புதியதாக பேருந்துநிலையம் அமைத்தல்.	14,90,000	16,50,000	15,50,000

ஆணையாளர் குறிப்பு :-

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/S. Glency Docmra Consultants India Pvt. Ltd, Chennai நிறுவனத்தினை அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண். 59:- ஆணையாளரின் குறிப்பை ஏற்று பொருள் எண்.59 தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 8

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் கட்டிட பணிகள் மற்றும் சாலை பணிகள் மேற்கொள்ள புதிய ஒப்பந்ததாராக பதிவு செய்ய கீழ்கண்ட நபர்கள் சொத்து மதிப்பு மற்றும் GST சான்றுடன் விண்ணப்பம் செய்துள்ளார்கள். மேற்படி கீழ்கண்ட நபர்களை நகராட்சியில் புதிய ஒப்பந்ததாராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

வ.எண்	பெயர்	முகவரி
1.	திரு, சிவராஜன்,	51/20, கல்யாணசுந்தர விநாயகர் கோவில் தெரு, திருச்செந்தூர்.
2.	திரு. பா. செந்தில்குமார்,	த/பெ. பால்ராஜ் நாடார், 4/1A2, விநாயகர் காலனி, திசையன்விளை ரோடு, உடன்குடி – 628203.
3.	திரு. சக்திவேல்	த/பெ. அருணாச்சல நாடார், 76ஏ, தேரியூர், கிழக்குத் தெரு, கிறிஸ்டியா நகரம் அஞ்சல்.

தீர்மானம் எண். 60:– நகர் மன்ற உறுப்பினரின் கருத்துப்படி பொருள் எண்.60 ஒத்திவைக்கப்பட்டது

பொருள் எண். 9

திருச்செந்தூர் நகராட்சி பகுதிகளில் கட்டிட வரைபடம் வரைய வரைவாளராக பதிவு செய்ய கேட்டு திரு. சுப்பிரமணியன் என்பவரிடமிருந்து விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

தீர்மானம் எண். 61:– நகர் மன்ற உறுப்பினரின் கருத்துப்படி பொருள் எண்.61 நிராகரிக்கப்பட்டது

பொருள் எண். 10

திருச்செந்தூர் நகராட்சி, திருச்செந்தூர் வட்டம், கீழத்திருச்செந்தூர் கிராமம் நத்தம் புல எண். 298/1, மொத்த விஸ்தீரணம் 0.56.0 ஹெக்டேரில் 0.09.50 ஹெக்டேர் மாட்டுத்தாவணி என்ற வகைப்பாட்டில் உள்ள நிலத்தினை கடலோர காவல்துறை பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டுவதற்கு நிலமாற்றம் செய்வது தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித ந.க.டி3/23826/2018, நாள். 19.11.2021 ல் தேதி அன்று வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

ஆணையாளரின் குறிப்பு :

திருச்செந்தூர் நகராட்சி, திருச்செந்தூர் வட்டம், கீழத்திருச்செந்தூர் கிராமம் நத்தம் புல எண். 298/1, மொத்த விஸ்தீரணம் 0.56.0 ஹெக்டேரில் 0.09.50 ஹெக்டேர் மாட்டுத்தாவணி என்ற வகைப்பாட்டில் உள்ள நிலத்தினை கடலோர காவல்துறை பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டுவதற்கு நிலமாற்றம் செய்வது தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதத்தில் கோரப்பட்டுள்ள

இடத்தில் திருச்செந்தூர் நகராட்சி புதிய அலுவக கட்டிடம், புதிய தினசரி சந்தை கட்டிடம் மற்றும் பூங்கா போன்றவை அமைக்கப்பட உள்ளதால் மேற்படி இடத்தினை குடியிருப்பு கட்டிடம் கட்ட ஒதுக்கீடு செய்ய இயலாது என்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கு.

தீர்மானம் எண். 62:– ஆணையாளரின் குறிப்பை ஏற்று தீர்மானம் எண்.62 நிராகரிக்கப்பட்டது.

பொருள் எண். 11

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில், இணை ஆணையர் / செயல் அலுவலர் (கூ.பொ) அவர்களின் கடித ந.க.எண். 15592/2021/இ4 நாள். 13.02.2022ன் கடிதத்தில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 29.11.2021ல் நடத்தப்பட்ட ஒழுங்கு ஆய்வு கூட்டத்தில் இத்திருக்கோயில் வளாகத்தில் சேகரமாகும் குப்பைகளை நகராட்சி குப்பை கிடங்கில் கொட்டுவற்கு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டதின் படி, கோவில் வளாகத்தில் சேரும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகள் என தனித்தனியே தரம் பிரித்து வழங்கும் பட்சத்தில் திருச்செந்தூர் நகராட்சி மூலம் தொகை நிர்ணயம் செய்ய கோரப்பட்டது, மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

தீர்மானம் எண். 63:– நகர் மன்ற உறுப்பினரின் கருத்துப்படி பொருள் எண்.63 ஒத்திவைக்கப்பட்டது .

பொருள் எண். 12

திருச்செந்தூர் நகராட்சி அரசாணை (நிலை) எண். 83, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள். 14.10.2021. மற்றும் அரசாணை எண். 116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 07.12.2021–ல் திருச்செந்தூர் சிறப்பு நிலை பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்நகராட்சியானது 24.00 ச.கி.மீ பரப்பளவு கொண்ட மிகப்பெரிய நகராட்சியாகும். இந்நகராட்சியில் தற்போது 27 வார்டுகள் உள்ளது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 32171 ஆக உள்ளது. நாளது தேதியில் சுமார் 35171 மக்கள் தொகை உள்ளது. மேலும் இங்கு மொத்தம் 10557 குடியிருப்புகள் உள்ளது. மேலும் இந்நகராட்சியில் தற்போது 83 தெருக்கள் உள்ளது. இந்நகராட்சியில் சிமெண்ட் சாலை 13.999 கி.மீ நீளமும், தார்ச்சாலை 12.619 கி. மீ நீளமும், மண்சாலை 3.576 கி.மீ, பேவர் பிளாக் சாலை 8.917 கி.மீ நீளமும் ஆக மொத்தம் 42.300 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் உள்ளது. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியின் வழியாக 21.000 கி.மீ நீளத்திற்கு தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை கடந்து செல்கிறது.

2. மேலும் இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள அதிக அளவில் ஜே.சி.பி. இயந்திரம் பயன்படுத்த வேண்டி உள்ளது. மேலும் இந்நகராட்சியின் ஒரு பகுதி கடலால் சூழப்பட்டுள்ளது. எனவே அடிக்கடி கடல் முகப்பு துவாரங்களில் அடைப்பு ஏற்பட்டு, கடல்நீர் குடியிருப்பு பகுதியை சூழந்து விடுகிறது. அதனால் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாத சூழல் ஏற்படுகிறது. இந்நிகழ்வு வாரத்தில் 3 முதல் 4

நாட்கள் ஏற்பட்டு விடுகிறது. ஜே.சி.பி (JCB) இயந்திரம் மூலம் கடல் முகப்பு துவரத்தை சரி செய்தால் மட்டுமே கடல் நீர் ஊருக்குள் செல்வதை தடுக்க முடியும். மேலும் பொது சுகாதார பணிகளை மேற்கொள்ளவும் ஜே.சி.பி (JCB) இயந்திரம் தேவைப்படுகிறது.

3. மேற்படி நிகழ்வுகளால், இந்நகராட்சி ஜே.சி.பி பயன்பாட்டிற்கு பொது நிதியிலிருந்து பெருமளவில் செலவு செய்ய நேரிடுகிறது. அதனால் திருச்செந்தூர் நகராட்சிக்கென புதியதாக ஜே.சி.பி இயந்திரம் பொது நிதியில் கொள்முதல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது.

4. எனவே, மேற்படி பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை சிறப்பினமாக கருதி, திருச்செந்தூர் நகராட்சிக்கு புதியதாக ஒரு ஜே.சி.பி **(JCB)** வாகனம் நகராட்சி பொதுநிதியில் இருந்து கொள்முதல் செய்ய, மேலும் அதனை நகராட்சி தற்காலிக ஓட்டுநர் மூலம் இயக்கி கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

தீர்மானம் எண். 64:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 13

திருச்செந்தூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் நாள்தோறும் இலட்சகணக்கான பக்தர்கள் வந்து செல்கிறார்கள். திருக்கோவிலலுக்கு வரும் பக்தர்கள் குளிப்பதற்கு மிகவும் சிரமப்படுவதால் திருச்செந்தூர் நகராட்சி எல்கைகளில் உள்ள பொதுக் கிணறுகளை தூர்வாரி பக்தர்கள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 65:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 14

திருச்செந்தூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் பழுதடைந்துள்ள மினி சின்டெக்ஸ் டேங்க் பழுது சரி செய்தும், மினி சின்டெக்ஸ் டேங்க் அமைக்கப்படாத பகுதிகளில் புதியதாக சின்டெக்ஸ் டேங்க் அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் சீராக வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 66:– தீர்மானிக்கப்பட்டது

(ஓம்) திருமதி. ர.சிவஆனந்தி,
தலைவர்
திருச்செந்தூர் நகர் மன்றம்

/உண்மை நகல்/

ஆணையாளர்
திருச்செந்தூர் நகராட்சி